<u>நகல்:—</u>

<u>சுருக்கம்</u>

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் –கல்வி – 2013–14 புதிய அறிவிப்புகள் – ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ /மாணவியருக்கு மாவட்ட அளவில் முதன்மை பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை வழங்கும் திட்டம் (District Toppers award) - பரிசுத் தொகையினை உயர்த்துதல் – ஆணை வெளியிடப்படுகின்றது.

---

<u>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3) துறை</u>

அரசாணை (நிலை) எண் : 84 நாள் :18.10.2013

விஜய ஐப்பசி 1, திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்கப்பட்டது.

இயக்குநர், ஆதிதிரரிவிடர் நலம் அவர்களின் கடித நக எண்.உ3/12199/ 2013 நாள் 15.5.2013.

-----

<u>ஆணை :—</u>

2013–14–ஆம் ஆண்டு புதிய அறிவிப்புகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணைப்படி மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்கள் பின்வரும் புதிய அறிவிப்பினை அறிவித்திருந்தார்.

“ஆதிதிராவிடர் /பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகிய மூன்று பிரிவுகளிலும் 10ஆம் வகுப்பில் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண்கள் எடுத்து முதலிடம் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு முதல் பரிசாக ரூ.2000/–ம், இரண்டாம் பரிசாக ரூ.1000/–ம், மூன்றாம் பரிசாக ரூ.500/–ம் வழங்கப்பட்டு வருகிறது. 12ம் வகுப்பில் மாவட்ட அளவில் முதல் மதிப்பெண் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசுத் தொகையாக ரூ.6000/–ம் வழங்கப்பட்டு வருகிறது. 2013–2014 ஆம் ஆண்டிலிருந்து ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகிய மூன்று பிரிவுகளிலும், 10ம் வகுப்பில் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு முதல் பரிசாக ரூ.3000/–ம் இரண்டாம் பரிசாக ரூ.2000/–ம், மூன்றாம் பரிசாக ரூ.1000/–ம் பரிசுத்தொகையினை உயர்த்தி வழங்கப்படும். அதே போன்று ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகிய மூன்று பிரிவுகளிலும், 12ம் வகுப்பில் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு முதல் பரிசாக ரூ.6000/–ம் இரண்டாம் பரிசாக ரூ.4000/–ம், மூன்றாம் பரிசாக ரூ.2000/–ம் என பரிசுத்தொகை வழங்கப்படும்”.

2. ஆதிதிராவிடர் நல இயக்குநர் தமது 15.5.2013 நாளிட்ட கடிதத்தில் 2013-2014ஆம் ஆண்டு புதிய அறிவிப்புகளில் வ.எண்.2ல் 2013-14ம் ஆண்டிலிருந்து ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகிய 3 பிரிவுகளிலும், 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு வழங்கப்படும் முதல் பரிசு தொகையினை ரூ.2000/-த்திலிருந்து ரூ.3000/-ஆகவும், இரண்டாம் பரிசுத் தொகையினை ரூ.1000/-லிருந்து ரூ.2000/-ஆகவும், மூன்றாம் பரிசுத் தொகையினை ரூ.500/-லிருந்து ரூ.1000/-ஆகவும் உயர்த்தி வழங்கியும், 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு முதல் பரிசாக ரூ.6000/-ம் இரண்டாம் பரிசாக ரூ.4000/-ம், மூன்றாம் பரிசாக ரூ.2000/-ம் பரிசுத்தொகையாக வழங்கியும் அறிவிக்கப்பட்டதற்கு ஏற்ப ஆணை வெளியிடுமாறும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்து, 2013-2014-ஆம் கல்வியாண்டு முதல் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகிய மூன்று பிரிவுகளிலும், 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு வழங்கப்படும் முதல் பரிசு தொகையினை ரூ.2000/-த்திலிருந்து ரூ.3000/-ஆகவும், இரண்டாம் பரிசுத் தொகையினை ரூ.1000/-லிருந்து ரூ.2000/-ஆகவும், மூன்றாம் பரிசுத் தொகையினை ரூ.500/-லிருந்து ரூ.1000/-ஆகவும் உயர்த்தி வழங்கியும், 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு முதல் பரிசாக ரூ.6000/-ம் இரண்டாம் பரிசாக ரூ.4000/-ம், மூன்றாம் பரிசாக ரூ.2000/-ம் பரிசுத்தொகையாக வழங்கியும் அரசு ஆணையிடுகிறது. பரிசுத் தொகையினை உயர்த்துவதால், தேவைப்படும் கூடுதல் தொகையினை 2014-2015 ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்வதற்கு தேவையான முன்மொழிவினை உரிய நேரத்தில் நிதி (ஆதி(ம)பந) துறைக்கு அனுப்புமாறு ஆதிதிராவிட நல இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

4. மேலே பத்தி 3-ல் அனுமதிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும் .

"2225 ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 01- ஆதிதிராவிடர் நலன் - 277 கல்வி-I திட்டத்தில் சேராதது AG - ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளுக்குப் பரிசுகள் வழங்குதல் -59 - பரிசுகளும் வெகுமதிகளும்".

ததொகுஎண்.(2225 -01-277- AG-5904)

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு எண்.57993/ஆதி(ம)பந/2013 நாள் 15.10.2013 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-5.
இயக்குநர், பள்ளிக்கல்வித்துறை, கல்லூரி சாலை, சென்னை-6.

அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் / அனைத்து மாவட்ட ஆதி(ம)பந அலுவலர்கள்.
மாநிலக் கணக்காய்வு தலைவர், சென்னை-6/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-8/35/6.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

நகல்:-

நிதித் (ஆதி(ம)பந / வசெ பொது-II) துறை, சென்னை-9.
பள்ளிக் கல்வித்துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு ஆதிதிராவிட நல அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்
செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்
அனைத்துப் பிரிவுகள், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

கே.லதா

பிரிவு அலுவலர்.